***கவனிக்க.-*** *2015.09.18 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1934 - 2015 සැප්තැම්බර් මස 25 වැනි සිකුරාදා - 2015.09.25

*1934 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# *பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி*

***(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)***


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1296 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனை | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1298 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |

| | பக்கம் |
|---|---|
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


***வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான***

## *முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2015, ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, ஒற்றோபர் மாதம் 02 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

***டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,***
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பதவிகள் — வெற்றிடம்

## மஹர பிரதேச சபை

*1.* மேல் மாகாண அரசாங்க சேவையில் மஹர பிரதேச சபையில் வெற்றிடமாகவுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வறத்தாக மேல் மாகாணத்தில் வதியும் தகுதிபெற்ற ஆட்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | பதவி | வெற்றிட எண்ணிக்கை | சம்பளஅளவு (மாதாந்தம்) | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1 | சாரதி | 2 | 12,470-10×130-10×145 - 10×160 - 12×170-ரூபா 18,860 (PL3-2006 A) | க. பொ. த. (சா./த.)பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.<br>மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட நிபுணத்துவ சான்றிதழ் மற்றும் வாகனச் சாரதியாக 5 வருட அனுபவம் இருத்தல் வேண்டும். (சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.) ஆகக் குறைந்தது 5 அடி உயரம் இருத்தல் வேண்டும். பகல் நேரத்திலும் மற்றும் இரவு நேரத்திலும் சேவையில் ஈடுபடுவதற்கு உடல் ரீதியாக தகுந்த நிலையில் இருத்தல் வேண்டும் என்பதுடன் சிறந்த கண்பார்வை இருத்தல் வேண்டும். நெடுஞ்சாலை சட்ட விதிக் கோவை பற்றிய சிறந்த அறிவு இருத்தல் வேண்டும். |

**2. ஆட்சேர்ப்புக்கான பொது நிபந்தனைகள் :**

(i) விண்ணப்பதாரர் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரர் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு அண்மித்த 3 ஆண்டு காலப் பகுதியில் மேல் மாகாணத்தில் நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும் ;

(iii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்கு 18 வருடங்களுக்கு குறையாமலும் 45 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர ஊழியர் தொடர்பாக உச்ச வயதெல்லை ஏற்டையதாகாது.)

(iv) விண்ணப்பதாரர் சிறந்த தேக ஆரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும் ;

(v) தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றமொன்றினால் குற்றவாளியாக்கப்பட்டவராக அல்லது அரசாங்க, மாகாண சபை சேவையிலிருந்து நீக்கப்பட்டவராக இல்லாதிருத்தல் வேண்டும் ;

(vi) விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் அல்லது விண்ணப்பங்கள் கோரப்படும் இடைப்பட்ட காலப்பகுதியில் இந்த ஆட்சேர்ப்பை தாமதப்படுத்தவோ அல்லது மாற்றங்கள் செய்யவோ அல்லது இந்த அறிவித்தலை இரத்துச் செய்யவோ திருத்தம் செய்யவோ மஹர பிரதேச சபையின் செயலாளருக்கு உரிமை உண்டு.

**3. சேவையில் இருத்துவதற்கான நிபந்தனைள் :**

(1) இந்தப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதியம் கொண்டதாகும் ;

(2) நியமனத் திகதி தொடக்கம் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும் ;

(3) விதவை/தபுதாரர் அநாதை ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும் ;

(4) இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு மேலதிகமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கட்டளைகளுக்கும், மேல் மாகாண சபை அல்லது மேல் மாகாண அரசாங்க ஆணைக்குழு அல்லது மஹர பிரதேச சபையினால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டளைகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுப்பதற்குக் கட்டுப்படுதல் வேண்டும்.

**4. ஆட்சேர்ப்புச் செய்யும் முறை :**

(1) கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் தகுதியானோர் தெரிவு செய்யப்படுவர்.

(2) விண்ணப்பம் படிவத்துடன் கீழ்க்காணும் சான்றிதழ்களின் பிரதிகள் அனுப்புதல் வேண்டும் என்பதுடன் மூலப் பிரதி நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பங்களுடன் கீழ்க்காணும் ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் அனுப்பப்படுதல் வேண்டும் :-

(1) பிறப்புச் சான்றிதழ் ;

(2) கல்விச் சான்றிதழ் ;

(3) வதிவை உறுதிப்படுத்தும் சான்றிதழ் ;

(4) அண்மையில் பெற்றுக்கொண்ட கிராம சேவை அலுவலரின் சான்றிதழ் ;

(5) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட நற்சாட்சிப் பத்திரம் ;

(6) ஏனைய தகைமைகள் காண்பிக்கும் சான்றிதழ்கள் ;

(7) சேவை அனுபவம் பற்றிய சான்றிதழ்.

**விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல் :-**

இந்த அறிவித்தலில் காண்பிக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் 12" × 8" அளவிலான விண்ணப்பப் படிவம் தயாரித்து விண்ணப்பிக்கும் பதவி, உரித்துடைய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் எழுதப்பட்டு 2015.10.16 ஆந் திகதிக்கு முன்னர் "செயலாளர், மஹர பிரதேச சபை, பஹல கரகஹமுன, கடவத்தை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். (ஏற்கனவே மாகாண அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் தங்களது சேவைத் தலைவரின் ஊடாக விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும்) உரிய திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

எஸ். ஏ. கே. என். இந்திரஜித்,
செயலாளர்,
மஹர பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பஹலகரகஹமுன,
கடவத்தை,
2015, செத்தெம்பர் 10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மஹர பிரதேச சபை**

மேல் மாகாண அரசாங்க சேவையில்.................................... பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்தல்

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
   முதலெழுத்துக்களால் அறிமுகமாகும் பெயர் :-----.
2. நிரந்தர வதிவு மாவட்டம்:-----.
3. நிரந்தர முகவரி:-----.
4. பால் (ஆண்/பெண்) :-----.
5. பிறந்த திகதி :----.
   2015.10.16 ஆந் திகதிக்கு வயது :- வருடங்கள் :----- மாதங்கள் :----- நாட்கள் :-----.
6. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.
7. இலங்கைப் பிரசையானது பிறப்பாலா அல்லது பதிவு செய்யப்பட்டதன் மூலமா? :-----.
8. கல்வித் தகைமைகள் :

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

(ii) ஏனைய தகைமைகள் :-----.

9. தொழில் ரீதியான தகைமை :-----.

10. சேவை அனுபவம் :-----.
    (i) தற்போது வகிக்கும் பதவி :-----.
    (ii) அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :-----.
    (iii) அந்தப் பதவியில் சேவைக்காலம் :-----.
    (iv) இதற்கு முன்னர் சேவை செய்த இடம் மற்றும் வகித்த பதவி :-----.

*இங்கு தரப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவு மற்றும் விசுவாசத்தின் பிரகாரம் உண்மையானதும், சரியானதும் என வெளிப்படுத்துகிறேன். இந்த ஆட்சேர்ப்பு சம்பந்தமாக என்னால் பிழையான தகவலொன்று அறிவிக்கப்பட்டுள்ளதென நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் அல்லது பின்னர் தெரியவந்தால் நான் சேவையிலிருந்து விலக்கப்படுவேன் எனவும் நான் அறிவேன்.*

----,
*விண்ணப்பதாரரின் கையொப்பம்.*

*திகதி : -----.*

**ஏற்கனவே சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கான நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

*இந்த விண்ணப்பதாரராகிய திரு./ திருமதி/ செல்வி .................................... தற்போது இந்த அலுவலகத்தில் .................................... ஆக சேவையாற்றுகின்றார். விண்ணப்பத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன்/சமர்ப்பிக்கவில்லை.*

-----,
*நிறுவனத் தலைவரின் கையொப்பம்.*
*உத்தியோக முத்திரை.*

*திகதி :-----.*

*9-607*

---

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**மெதகும்பர பிரதேச சபை**

*மெதகும்பர பிரதேச சபை 2015 ஆம் ஆண்டின் மே மாதம் 14 ஆந் திகதி நடத்திய அதன் பொதுக் கூட்டத்தில் 5.1 தீர்மான இலக்கத்தின் கீழ் பின்வரும் பிரேரரணை நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் பொதுமக்களுக்கு அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.*

*ஈ. எம். எம். சீ. பி. ஏக்கநாயக்க,*
*செயலாளர்,*
*மெதகும்பர பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*மெதகும்பர,*
*2015, ஓகத்து 31.*

**தீர்மானம்**

**மெதகும்பர பிரதேச சபை**

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (நிறைவேற்றப்பட்ட துணை விதிகள்) சட்டம்*

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (நிறைவேற்றப்பட்ட துணைவிதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் உள்ளூராட்சி அமைச்சரால் தயாரிக்கப்பட்டு 1988 ஆம் ஆண்டின் ஓகத்து மாதம் 23 ஆந் திகதியைக் கொண்ட 520/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1 ஆவது பிரிவு மற்றும் 2 ஆவது பிரிவுகளின் 1 முதல் 42 வரையுள்ள தொகுதிகளை, 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 221 "அ" பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய குறித்த சட்டத்தின் 122 மற்றும் 126 ஆவது பிரிவுகளுக்கமைய பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் மெதகும்பர பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குப் பொருந்தும் வகையில் குறித்த துணைவிதிகளின் 2 ஆவது பிரிவின் 3 ஆவது உப பிரிவின் ஏற்பாடுகளின் படி ஏற்றுக்கொள்வதென 1991.09.27 ஆந் திகதி நடைபெற்ற மெதகும்பர பிரதேச சபையின் பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதென இத்தால் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

*ஜீ. ஆர். எஸ். பி. கமகே ஜயரத்ன,*
*தவிசாளர்,*
*மெதகும்பர பிரதேச சபை.*

*9-516*

**மஹரகம நகர சபை**

*நகர சபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 50 ஆம் மற்றும் 52 ஆம் பிரிவுகளின் நியதிகளின் கீழ் அறிவித்தல்*

நகர சபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 50 ஆம் மற்றும் 52 ஆம் பிரிவுகளின் நியதிகளின்படி மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தில் உள்ள மஹரகம பிரதேச செயலாளர் பிரிவில் மஹரகம நகரசபையின் எல்லைகளில் அமைந்துள்ள பின்வரும் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட வீதிகள் மஹரகம நகர சபைக்கு உரிய வீதிகளாக பிரகடனப்படுத்தப்படல் வேண்டும் என்று பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட வீதிகள் மஹரகம நகர சபையினால் உடைமையாக்கப்படுகின்றன என்ற இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

(2) பொதுமக்கள் அல்லது உரிய காணி உடைமையாளர்களிடமிருந்து இந்த விடயம் குறித்து ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் அத்தகைய ஆட்சேபனைகள் பொருட்டான காரணங்கள் வர்த்தமானியில் இந்த அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாத காலப்பகுதியினுள் எழுத்தில் கொடுக்கப்படல் வேண்டும் ;

(3) ஆட்சேபனைகள் எதுவும் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியினுள் தெரிவிக்கப்படாவிடின் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட வீதிகள் மஹரகம நகர சபைக்க சொந்தமானதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு கட்டுப்படுத்தப் படும் என்று இத்தால் பொதுமக்களின் தகவல் பொருட்டு அறிவிக்கப்படுகின்றது.

செயலாளர் அல்லது சபையின்
கருமங்களுக்கான பொறுப்பாளர்,
மஹரகம நகர சபை.

நகர சபை அலுவலகம்,
மஹரகம,
2015, செத்தெம்பர் 4.

| தொடர் இலக்கம் | திட்ட இலக்கமும் திகதியும் | வீதியின் பெயர் | வீதியின் நீளம் | வீதியின் அகலம் | அட்டவணையின் பிரகாரம் எல்லைகள் |
|---|---|---|---|---|---|
| 1. | திட்ட இலக்கம் : 7/85<br>திகதி : 30.11.1985 | மஹரகம பமுனுவ வீதி மாரகஹலந்த பிரதேச வீதி | 335 அடி | 10 அடி | வடக்கு : வ. இ. 103/2ஐ மாரகஹலந்த திரு. எல். திலகரத்னவின் காணி மற்றும் வ. இ. 103/ 2 A திரு. லியனரத்னவின் காணி மற்றும் வ. இ. 103/ 1 மாரகஹலந்த காணி மற்றம் வ. இ. 103 மாரகஹலந்த போதரகம ஆகியோரின் காணி;<br>தெற்கு : காணித் துண்டு இலக்கம் 6, காணித்துண்டு இலக்கம் 5, காணித் துண்டு இலக்கம் 4, காணித்துண்டு இலக்கம் 1 மற்றும் 2 மற்றும் காணித் துண்டு இலக்கம் 3 முதலிய காணிகள்;<br>கிழக்கு : பமுனுவ வீதி ;<br>மேற்கு : வ. இ. 103/3 சம்பத் அல்விஸ் என்பவரின் காணி. |
| 2. | திட்ட இலக்கம் : 4641<br>திகதி : 27.05.2006 | மஹரகம பன்சல வீதி இலக்கம் 159/12/ஏ முதல் 159/12ஈ வரை வீடுகள் அமைந்துள்ள ஒழுங்கைகள் | 170 அடி | 10 அடி | வடக்கு : காணித்துண்டு இலக்கம் A6, காணித்துண்டு இலக்கம் A7, காணித்துண்டு இலக்கம் A8 மற்றும் காணித்துண்டு இலக்கம் 1<br>தெற்கு : தெற்கு பக்க பிரதேசவாசிகள் பிரவேசிப்பதில்லை;<br>மேற்கு : காணித்துண்டு இலக்கம் A6,<br>கிழக்கு : பன்சல வீதி. |

9-569

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி

*1987 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க களரிகளுக்கு உரிமளித்தல் சட்டம்*

இதன் கீழ் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நபர், இடத்தில் அவரின் பெயருக்கு எதிராக குறிப்பிடப்பட்டுள்ள களரியை 2016 ஆம் ஆண்டில் வைத்திருப்பதற்கு மேற்கூறப்பட்ட உரிமமளித்தல் கட்டளைச்சட்டத்தின் 6 ஆம் பிரிவிற்கு அமைய இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

அத்தகைய உரிமம் அக்களரிக்கு வழங்கப்படுவதற்கு ஆட்சேபனை தெரிவிக்க விரும்பும், சொல்லப்பட்ட களரிக்கென உத்தேசிக்கப்பட்டிருக்கும் வளவிற்கு அண்மையில் வதியும் எந்த ஆளும் தனது ஆட்சேபனைக்கான ஏதுக்கள் பற்றிய எழுத்து மூலமான கூற்றொன்றினை வர்த்தமானியில் இவ் அறிவித்தல் வெளியிடப்படும் திகதியிலிருந்து நான்கு வாரங்களுக்குள் இரு பிரதிகளில் எனக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

க. கனகதுரை,
செயலாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி,
2015, செத்தெம்பர் 03.

### அட்டவணை

| விண்ணப்பதாரியின் பெயரும் முகவரியும் | களரியின் தலைவரா, செயலாளரா அல்லது முகாமையாளரா என்பது | களரியின் பெயர் | களரி அதனது செயற்பாடுகளை நடாத்த உத்தேசித் திருக்கின்ற மனைத் தளம் |
|---|---|---|---|
| ஐயாத்துரை விக்னேஸ்வரன் யோகா இல்லம், கரணவாய் வடக்கு, கரவெட்டி. | முகாமையாளர் | ஐங்கரன் பொழுதுபோக்குக் கழகம் | பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி |

9-618

---

## அரநாயக்க பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 14 ஆம் மற்றும் 24 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்*

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24 ஆவது பிரிவின் பிரகாரம் சப்பிரகமுவ மாகாணத்தின் கேகாலை மாவட்டத்தின் அரநாயக்க பிரதேச சபையால் இங்கு இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பாதைகள்/வீதிகள் அரநாயக்க பிரதேச சபைக்குரிய பாதைகள்/வீதிகள் எனப் பிரகடனப்படுத்தி இத்தால் விடுக்கப்படுகின்றது.

தற்போது பிரதேச சபையால் அளந்து அடையாளமிடப்பட்டுள்ள இப்பாதைகள்/வீதிகள் பற்றி குறித்த காணி உரிமையாளராக உரிமை பாராட்டுவோரால் ஏதாவது எதிர்ப்புக்கள் தெரிவிப்பதாயின் இவ்வறிவித்தல் திகதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் தங்களது உரிமையை உறுதிப்படுத்துவதற்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24 (2) ஆம் உறுப்புரையின் பிரகாரம் செயற்படுமாறு இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

இக்கால எல்லைக்குள் யாதேனுமொரு எதிர்ப்பு முன்வைக்கப்படாவிடின் அட்டவணையில் குறிப்பிடப்படும் பாதைகள்/வீதிகள் அரநாயக்க பிரதேச சபைக்குச் சொந்தமாக பாதைகள்/வீதிகளாக ஏற்றுக்கொண்டு நிர்வகிக்கப்படும் எனவும், பொதுமக்கள் அறிந்து கொள்வதற்காக இத்துடன் பகிரங்க அறிவித்தல் விடுக்கின்றேன்.

டீ. எம். சந்ராவதி,
செயலாளர்,
அரநாயக்க பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
அரணாயக,
2015, செத்தெம்பர் 8.

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | கெஹெல்வத்தை பெலிகஸ்வத்தை பாதை |
| பாதையின் ஆரம்பமும் முடிவும் | : | பெலிகஸ்வத்தை கோவிலவத்தையில் இருந்து இஹலவத்தை வரையான பாதை |
| கிராம அலுவலர் பிரிவு | : | 48 கெஹெல்வத்தை |
| பாதையின் நீளம் | : | 165 மீற்றர் |
| பாதையின் அகலம் | : | 8 அடி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் இடது பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | |
|---|---|
| 1. திருமதி டபிள்யு. புஞ்சிநோனா மற்றும் எம். ஆர். புஞ்சிமஹத்தயா | கோவிலவத்தை எனும் பெலிகஸ்வத்தை காணி |
| 2. திரு. எம். பீ. சூரசேன மற்றும் எம். ஜீ. சூரசேன | இஹலவத்தை |
| 3. திரு. எம். பீ. ரசிக | இஹலவத்தை |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் வலது பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | |
|---|---|
| 1. திருமதி டபிள்யு. புஞ்சிநோனா மற்றும் எம். ஆர். புஞ்சிமஹத்தயா | கோவிலவத்தை எனும் பெலிகஸ்வத்தை காணி |
| 2. திரு. எம். பீ. சூரசேன மற்றும் எம். ஜீ. சூரசேன | இஹலவத்தை |
| 3. திரு. பீ. கே. கருணாதிஸ்ஸ | இஹலவத்தை |
| 4. திரு. எம். பீ. சோமரத்ன | இஹலவத்தை |
| 5. திரு. என். உதயகுமார | இஹலவத்தை |

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | கல்அதர ரயிகொடவத்தை பாதை |
| பாதையின் ஆரம்பமும் முடிவும் | : | ரயிகொடவத்தை திரு. கபில அவர்களின் வீட்டு அருகிலிருந்து திருமதி ப்ரியானி குமாரி ஜயசிங்க அவர்களின் வீடு வரையான பாதை |
| கிராம அலுவலர் பிரிவு | : | 15 C கல்அதர |
| பாதையின் நீளம் | : | 114 மீற்றர் |
| பாதையின் அகலம் | : | 8 அடி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் இடது பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | |
|---|---|
| 1. திரு. எம். காமினி வசந்த குமார | இஹலகலேஹேன காணி |
| 2. திருமதி பண்டார மெனிகே | இஹலகலேஹேன காணி |
| 3. திரு. டபிள்யு. டி. நிஹால் ப்ரேமரத்ன | இஹலகலேஹேன காணி |
| 4. திரு. ஜே. காமினி | இஹலகலேஹேன காணி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் வலது பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | |
|---|---|
| 1. திரு. வி. பீ. கபில குமார | இஹலகலேஹேன காணி |
| 2. திரு. எம். பீ. பியசேன மற்றும் திருமதி எம். லலிதா பத்மினி | ரயிகொடவத்தை காணி |
| 3. திருமதி ஜே. ஜீ. ஸ்ரீயானி குமாரி | இஹலகலேஹேன காணி |
| 4. திரு. டபிள்யூ. டி. நிஹால் ப்ரேமரத்ன | இஹலகலேஹேன காணி |

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | பரபிட்டிய குடியிருப்பு துணைப் பாதை |
| பாதையின் ஆரம்பமும் முடிவும் | : | பரபிட்டிய குடியிருப்பில் காலம்சென்ற திரு. ரஞ்ஜித் சமரசிங்க அவர்களின் வீட்டுக்கருகில் ஆரம்பித்து ஆறாவது வீடாகிய திரு. எச். பீ. ஆரியரத்ன அவர்களின் வீடு வரையான பாதை |
| கிராம அலுவலர் பிரிவு | : | 47A தெபத்கமை பல்லேபாகே |
| பாதையின் நீளம் | : | 125 மீற்றர் |
| பாதையின் அகலம் | : | 8 அடி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் இடது பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | |
|---|---|
| 1. திரு. டபிள்யூ. கே. தயாரத்ன | படல்தென்னமூகலானை காணி |
| 2. திரு. ஜீ. டி. விஜேசேகர | படல்தென்னமூகலானை காணி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் வலது பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | |
|---|---|
| 1. திரு. எஸ். பீ. சேதரா | படல்தென்னமூகலானை காணி |
| 2. திரு. ஜீ. டி. விஜேசேகர | படல்தென்னமூகலானை காணி |

9-633

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.